இடங்களிலே தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு, அதன் மூலம் தொழில் உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறது. வெண்மணியாத்தூர் என்கிற இடத்தில் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு பல நேரங்களில் தொழில் முனைவோரிடத்திலேயிருந்து அந்த இடங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று செய்தித்தாள்களில் விளம்பரம் அறிவித்தும்கூட, அவர்கள் வராத காரணத்தால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலம் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு 40 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த 40 ஏக்கர் நிலத்தைத் தனியார் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஆக்கிரமிப்பு இருக்குமேயானால், யார், யார் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குத் தெரிய வந்தால், காவல் துறையின் உதவியோடு அந்த இடத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

12—

குளியல் சோப்பு அலகு

***49708—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் கதர் வாரியம் மூலம் குளியல் சோப்பு தயாரிக்கும் அலகு ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

[2005 பிப்ரவரி 2

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் கதர் வாரியம் மூலம் குளியல் சோப்பு அலகு ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். சுனாமியின் சீற்றத்தால் பேரழிவைச் சந்தித்து, உற்றார், உறவினர்களையும், ஊட்டி வளர்த்த பச்சிளங்குழந்தைகளையும், உடைமைகள் அனைத்தையும் இழந்து, எதிர்காலமே இருண்டு போனதாக எண்ணி, ஏங்கித் தவித்த மீனவ சமுதாய மக்களுக்கு, உலகமே வியக்கத்தக்க வகையில், பாதிக்கப்பட்டவர்களை நேரடியாகச் சந்தித்து, ஆறுதல் கூறி, போர்க்கால அடிப்படையில் மறுவாழ்வு தந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நாகை மாவட்டத்தின் சார்பாகவும், எனது சீர்காழி தொகுதியிலுள்ள 14 மீனவ கிராம மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

சீர்காழி தொகுதி காவிரி டெல்டாவின் கடைமடைப் பகுதியாகும். விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற விவசாயக் கூலித் தொழிலாளிகள் அதிகமாக வசிக்கின்ற பகுதி. சீர்காழி தொகுதியில் எந்தவொரு தொழிற்சாலையும் கிடையாது. ஆகவே, சீர்காழி நகரில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் புளியந்துறை, பழையபாளையம் போன்ற இடங்களில் கதர் வாரியம் மூலம் கட்டப்பட்ட கட்டடங்கள் உள்ளன. எனவே, குளியல் சோப்பு தயாரிக்கும் அலகு ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தால், அதன்மூலம் விவசாயத்தையே நம்பி வாழும் பலரும், மகளிர் சுய உதவிக் குழுக்களும் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். எனவே, சீர்காழி நகரில் சோப்பு தயாரிக்கும் அலகு ஒன்றை அமைத்துக் கொடுக்க மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகருக்கு அருகில் நாஞ்சிக்கோட்டையில்

2005 பிப்ரவரி 2]

வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் குளியல் சோப்பு அலகு ஏற்கெனவே இயங்கி வருகிறது. குளியல் சோப்புகளைத் தயாரிக்கின்றபோது, தேவைக்கேற்பத்தான் குளியல் சோப்பைத் தயாரிக்க முடியும். அதிகமான அளவிற்கு உற்பத்தி செய்துவிட்டு, அதற்குப் பிறகு அதைப் பாதுகாப்பது என்பது மிகச் சிரமமான காரியம். இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள், ரேஷன் கடைகளின் மூலமாக இந்தக் குளியல் சோப்பு விற்பனை செய்யப்பட வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே இருக்கின்ற கதர் வாரியத்தின்கீழ் நடத்தப்படக்கூடிய குளியல் சோப்பு அலகு உற்பத்தி செய்யக்கூடிய இடங்களின் மூலமாக, தேவைகளைப் பெற்று, அதன்மூலமாகத்தான் இன்றைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காலி இடங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். குளியல் சோப்பு அலகு உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கதர் வாரியத்தின் மூலமாகத் தொடங்கப்பட்ட கைமுறைக் காகித அலகு, குளியல் சோப்பு அலகு இவையெல்லாம் செயல்படாமல் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியென்றால், அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான தகவல்களை அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்; தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறார்; ஏற்கெனவேயும் தந்தார்; இப்போதும் தந்துகொண்டிருக்கிறார். குளியல் சோப்பு அலகு ஓரிடத்திலே உருவாக வேண்டுமென்று சொன்னால், அதற்குப் போக்குவரத்து வசதி இருக்க வேண்டும்; தண்ணீர் வசதி இருக்க வேண்டும்; இந்த வசதிகள் அல்லாது, மூலப் பொருட்கள் அருகிலேயே கிடைக்க வேண்டும். இவையெல்லாம் கிடைத்தால்தான், குளியல் சோப்பு அலகு உற்பத்தி செய்வதற்கு வசதி வாய்ப்புகள் இருக்கும். குளியல்

[2005 பிப்ரவரி 2

சோப்பு அலகு உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஆரம்பித்ததற்குப் பிறகு, கடந்த ஆண்டு கடுமையான தண்ணீர்ப் பஞ்சத்தின் காரணத்தால் அந்த இடங்களிலே உற்பத்தி நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது மழை கொஞ்சம் ஆரம்பித்து, அதுவும் இப்போது நின்றிருக்கிறது. இனிமேல் தொடர்ந்து தண்ணீர் வசதி கிடைக்கக்கூடிய இடங்களில், தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசன், தண்ணீரே இல்லாமல், சோப்பை வைத்து என்ன செய்வீர்கள்? (சிரிப்பு)

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஊரிலேயே கைமுறைக் காகிதம் தயாரிக்கும் அலகு தொடங்கப்பட்டு, 10 ஆண்டுகளாகச் செயல்படாமல் இருக்கிறது. அதைப்போல, புதுக்கோட்டை மாவட்டத்தில் கீரமங்கலம் என்கிற இடத்திலேயும் கைமுறைக் காகித அலகு தொடங்கப்பட்டு, பத்து ஆண்டுகளாகச் செயல்படாமல் இருக்கின்றது. நான்..... (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ப. அரசன்: நான் கேள்வியிலேயே குறிப்பிட்டேன். கைமுறைக் காகித அலகு என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகுதான் குளியல் சோப்பைச் சொன்னேன். புதுக்கோட்டை மாவட்டத்திலேயே இரண்டு அலகுகள் செயல்படாமல் இருக்கின்றன. குறைந்தபட்சம் எங்களுடைய மாவட்டத்திலேயாவது அந்த அலகுகள் மீண்டும் செயல்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]